**தேசிய பாதுகாப்பு நிதியம் - 2025**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டம் மற்றம் விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் மற்றும் 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா என்பதும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும் மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்ட) சட்டம் மற்றும் 2022 இன் 45 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2017 ஒக்டோபர் 25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தேசிய பாதுகாப்பு நிதியம், வருமான வரியிலிருந்து விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் காணப்படாதிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் உரிய சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான வரி பணிகளுக்காக பதிவு செய்தமை மற்றும் தேவையான அறிக்கை சமர்ப்பிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆளுகைச் சபைக் கூட்டத்திற்காக வரி பதிவு செய்தல் தொடர்பாக ஆளுகைச் சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதற்காக அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் வரி பணிகளுக்காக பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் வருமான வரி பணிகளுக்காக பதிவு செய்தல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 22,160,023 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 69,946,544 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 92,106,567 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மெத்செவண வீட்டிற்கான நலன்கள் செலுத்துதல் ரூபா 110,442,509 இனால் அதாவது 20.16 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமை தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | காணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் தமது கடமைகளை நிறைவேற்றுகின்ற காலப் பகுதியில் காயமடைந்த அல்லது மரணமடைந்த பொலிஸ் படையணியினர் அல்லது ஆயுதப்படை இராணுவம் அல்லது ஏவதாவது அங்கத்தவரின் குடும்பங்களுக்கு ஏதாவது நலன்கள் செலுத்துதலை உள்ளடக்கி தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் மிகவும் காரணமானதென சபை கருதுகின்ற முறையில் மற்றும் பணிகளுக்கு நிதியத்திற்குரிய பணத்தை ஈடுபடுத்துவதற்கு முடியுமாக காணப்பட்ட போதிலும் செயற்பாட்டு கடமைகளின் போது மரணமடைந்த அல்லது ஊனமுற்ற படையினருக்கு அரைவாசியாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பூர்த்தி செய்வதற்காக நிதி உதவி கையளித்தல் தவிர, தேசிய பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துவதற்காக நிதியத்தின் நோக்கங்களுடன் நேரடியாகத் தொடர்பு படுகின்ற ஏனைய பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்கள் இனங்கண்டு திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துதல் தொடர்பில் போதியளவான கவனமொன்று மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கடமைகளை நிறைவேற்றுகின்ற காலப் பகுதியில் காயமடைந்த அல்லது மரணமடைந்த ஆயுதப்படை இராணுவ அங்கத்தவர்களுக்கு, அவர்களின் குடும்பங்களின் நலன்களுக்கும் நிதியத்தின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற மெத்செவண அரை வீடமைப்புத் திட்டம் மற்றும் விருசிசு பிரதீப புலமைப் பரிசில் வழங்கும் செயற் திட்டத்தின் வசதிகள் வழங்குவதன் மூலம் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், படையினரின் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்பதன் மூலம் அவர்களை உளரீதியில் கட்டியெழுப்ப முடியும். அதன் மூலம் தேசிய பாதுகாப்பை மேம்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்கப்படுகின்றது. | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 09 ஆம் பிரிவின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக தேசிய பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும் உறுதிப்படுத்துவற்கும் நேரடியாக பங்களிக்கின்ற பொருத்தமான நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆளுகைச் சபை 2023 நவம்பர் 17 ஆந் திகதி இறுதித் தடவையாக கூடியிருந்ததுடன் அதன் பின்னர் 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் அல்லது 2026 மார்ச் 31 ஆம் திகதி வரை கூட்டங்கள் கூடியமைக்கு | தேசிய பாதுகாப்பு நிதிய ஆளுகைச் சபை அங்கத்தவர் ஒருவராக சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற பிரதி நிதியாக பேராசிரியர் | ஆளுகைச் சபைக் கூட்டம் குறித்துரைத்த காலத்தை விஞ்சுவதற்கு முன் பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் |

| | | |
|---|---|---|
| அறிக்கையிடப்பட்ட சான்றுகள் காணப்படவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் ஆளுகைச் சபையின் முழுமையான அங்கீகாரத்திற்கு முன் அங்கீகாரத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அத்தங்கனை ரத்தனபால தேரர் அவர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் 15 ஆவது ஆளுகைச் சபை 2026 ஏப்ரல் 18 ஆந் திகதி கூடியிருந்தது. அதன் போது ஆளுகைச் சபைப் பத்திரமாக சமர்ப்பிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டிற்குரிய பாதீடு, செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் நிதிக் கூற்றுக்கள் செயலாற்றல் அறிக்கைக்காக ஆளுகைச் சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. | திட்டத்தை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| காணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மெத்செவண திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டின் போது படைவீரர்களின் அரைவாசி நிர்மாணிக்கப்பட்ட 50 வீடுகளைப் பூர்த்தி செய்வதற்காக நலன்களைச் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இராணுவம், கடற்படை மற்றும் பொலிஸ் நலனாளிகள் 32 பேர்களுக்கு செலுத்துவதற்காக தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 32 நலனாளிகளுக்காக ரூபா 28.17 மில்லியன் நிதி உதவி 03 தவணைகளின் கீழ் ஆண்டின் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2025 திசம்பர் 31 ஆந் திகதி வரையில் 25 நலனாளிகளுக்கு முதலாவது தவணையாக ரூபா 7.5 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலுத்துவதற்கு திட்டமிடப்பட்ட தொகையில் 73 சதவீதம் அதாவது ரூபா 20.67 மில்லியன் செலுத்த வேண்டி காணப்பட்டதுடன் திட்டமிடப்பட்ட பிரகாரம் நலன்களை செலுத்தி பூர்த்தி செய்வதற்கு முடியாமையின் காரணமாக செயற்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட செயல் முன்னேற்றத்தை கைப்பெற்றிக் கொள்ள முடியவில்லை. | மெத்செவண அரைவாசி நிர்மாணிக்கப்பட்ட வீட்டுத் திட்டத்திற்குரியதாக கவனத்திற் கொள்ளப்படுகின்ற கணக்காண்டில் எதிர்பார்க்கப்பட்ட பகுதி ஆண்டிலேயே பூர்த்தி செய்வதற்கும், செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து விரைவாக பூர்த்தி செய்வதற்கும் செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போது முப்படைகளுக்கும், பொலிஸிற்கும் உரிய நலன்புரி பிரிவுகள் மற்றும் செயற் திட்டத்திற்குரிய மாவட்ட இணைப்பு உத்தியோகத்தர்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் செயற்திட்டம் தாமதமடைந்ததற்காக முன்னைய காலப் பகுதியில் தாக்கமளித்த காரணங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நலன்புரிய பிரிவுகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி செயற்திட்டத்தினை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்தின் இலக்கிடப்பட்ட நலனாளிகளுக்கு நலன்களை விரைவாக வழங்குவதற்கும் செயற் திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற் பார்வை செய்து குறித்துரைத்த கால எல்லையில் பூர்த்தி செய்வதற்கும் செயல் முன்னேற்ற மீளாய்வை மேற்கொண்டு இனங் காணப்பட்ட இடையூறு களுக்காக விரைவாக தீர்வினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| காணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நியத்தின் நிதிக்கூற்றுகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை என்பவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் நிதியத்தின் 2017 முதல் 2024 வரையான காலப் பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பாதுகாப்பு நிதியத்தின் 2017 ஆம் ஆண்டு முதல் 2024 வரையான நிதிச் செயலாற்றல் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் என்பன பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | 1985 இன் 09 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு குறித்துரைத்த கால எல்லையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |